# தவக்காலத்தின் மூன்றாவது ஞாயிறு

## மூன்றாவது திருவழிபாடு ஆண்டு

### இன்றைய வாசகங்கள்:

விடு.பயண 3:1-8,13-15, 1கொரிந் 10:1-6,10-12, லூக்கா 13:1-9

### திருப்பலி முன்னுரை:

இறைமகன் இயேசுவில் அன்பு நிறை அருட்தந்தை! (அருட்தந்தையர்களே) இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே! துன்பங்களைத் துடைத்து, அடிமைத்தன வாழ்வை அகற்றி மகிழ்ச்சியில் நம்மை நிலைப்படுத்தும் இறைவனின் நாமத்தில் நல்வாழ்த்துக்கள். தவக்கால மூன்றாம் வாரத்தில் ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

இங்கே அணுகி வராதே: உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு: ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்"

மக்கள்படும் துன்பத்தையும், அவர்கள் எழுப்பும் அவலக் குரலையும், அவர்களின் துயரங்களையும் இறைவன் ஒருபோதும் சகித்துக்கொள்வதில்லை. மிகுந்த மனதுருக்கம் உடையவரான நம் தந்தையாம் இறைவன் நம் ஒவ்வொருவர் மீதும் கண்ணும் கருத்துமாக இருந்து முழுமையானதும், உலகம் தரமுடியாததுமான விடுதலையையும், அமைதியையும், மகிழ்ச்சியையும் தருகின்றார். அவரே நம் வாழ்வின் அரணும், பாதுகாப்பும், கேடயமுமாக இருக்கின்றார் என்னும் உன்னத உண்மைகள் இன்றைய இறைவார்த்தைகளின் இதய நாதமாக இருக்கின்றன. எனவே, இறைவனிடம் முழுமையாக நம்மை ஒப்படைத்து அவர் காட்டும் ஒளியிலும் , வழியிலும் நடப்போம். ஆவரைச் சிக்கெனப் பிடித்துக்கொள்வோம். அவர் வழியாகவே முதலும், முழுமை யானதுமான அமைதியையும், விடுதலையையும் பெற்றுக் கொள்ள முயலுவோம். நம்மையே முழுவதும் ஒப்புக்கொடுத்துச் செபிப்போம். இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**ஆசீரும் அருளும் நிறைந்த அன்புத் தந்தையே இறைவா!**
உமது பிரதிநிதிகளாக இருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் மக்களுக்கு ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும் : அவர்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றவாகளாகவும், நல்ல வழிகாட்டிகளாகவும் இருந்து பணியாற்ற வேண்டிய பலத்தையும் உடல் நலத்தையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கொடைகளின் தந்தையே இறைவா,**
உம்மைப் போற்றுகிறோம். நீர் எங்களுக்குத் தந்திருக்கிற கொடைகள், ஆற்றல்கள், திறமைகள் அனைத்திற்காகவும் நன்றி கூறுகிறோம். இந்தத் திறமைகளைக் கொண்டு நாங்கள் உமக்கும், பிறருக்கும் கனிகளை வழங்கும் அருளை எங்களுக்குத் தாரும். இத்தவக்காலத்தில் எங்கள் வாழ்வில் மாற்றங்களை அருளும். நற்கனி கொடுப்பவர்களாக எங்களை மாற்றிருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என்னைக் கை பிடித்து நடக்கப் பழக்கின தந்தையே! எம் இறைவா!**
நீர் எமக்குக் கொடுத்துள்ள மக்கள் செல்வங்களுக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். இவர்கள் உம்மையே தேடி நேசிப்பதிலும், உமது வார்த்தைக்கு ஆர்வத்துடன் செவிமடுத்து வாழுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தவும்: எமது பிள்ளைகள் இறையுறவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும், கல்வியிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த பிள்ளைகளாக வாழவும், செயற்படவும் உமக்குப் பணிபுரிவதற்கு வேண்டிய நல்லுள்ளம் அவர்களிடம் உருவாகிடவும் அவர்களை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**
இந்நாட்களிலே எமக்கு நீர் பல்வேறு விதமாக வெளிப்படுத்தும் உமது செய்தியையும், விருப்பத்தையும், சித்தத்தையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு உம்மோடும், எம் உறவுகளோடும் ஒப்புரவாகி, மனமாற்றமடைந்து உமது விருப்பப்படி நடக்க வேண்டிய ஞானத்தை எமக்குத் தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**புத்துயிர் கொடுப்பவராம் இறைவா,**

அன்புத் தந்தையே இறைவா! நீர் எமக்குக் கொடுத்துள்ள் ஆற்றல்கள், திறமைகள், செல்வங்கள் அனைத்திற்காகவும் உமக்கு நன்றி கூறுகின்றோம். இவைகளை நாம் சரியான விதத்திலே பகிர்ந்து வாழவும், தன்னலமற்ற விதத்திலே அவற்றை திருச்சபையின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவும் வேண்டிய நல்லுள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆறுதலின் ஊற்றே இறைவா!**

நோயுற்றும், வேலையின்றியும் இடம்பெயர்ந்தும் அகதிகளாயும், பல்வேறு குடும்பச் சுமைகளாலும், கடன் தொல்லையினாலும் வேதனைப்படும் அனைவர் மீதும் இரக்கமாயிரும். இவர்களின் துன்ப துயரங் களைப் போக்கி நிலையான வேலையையும் நிம்மதியான இருப்பிடத்தையும் வழங்கிக் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்களை உமது உரிமைச் சொத்தாகத் தேர்ந்து கொண்ட இறைவா!**

எங்கள் குடும்பங்கள் தன்னலம் மறந்து உம்மைப் போல் அடுத்தவர்களின் வாழ்வு மலர உளமாற உழைக்கவும், உமது நற்செயல்களை எங்கள் வாழ்க்கையில் கடைபிடித்து வாழவும், மற்றவர்களையும் உமது இறையரசில் அழைத்து வர நற்சாட்சிகளாக மாறவும் வேண்டிய வரங்களை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

அருட்கொடைகளை வாரிவழங்கிடும் எம் இறைவா!

உம்மைப் போற்றுகிறேன். பிறரது துன்பத்தைக் கண்டு அவர்களைத் தீர்ப்பிடாத அருளைத் தாரும். அதே வேளையில் என்னுடைய வாழ்வில் மனமாற்றத்தைப் பெற்று புது வாழ்வு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தாயும் தந்தையுமான இறைவா,**

உடல், உள நோயினால் வேதனையுறும் அனைவரையும் நீர் இரக்கத்துடன் கண்நோக்கி: அவர்களின் வேதனையைத் தணித்து, நிறைவான உடல், உள நலத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்றும், இன்று எமது சமூகத்திலே வீணான விவாதங்களாலும், குழப்பங்களாலும், தவறான போதனைகளாலும், பிடிவாதத்தாலும், உறவை முறித்து, விசுவாசத்தை மறந்து பாதை மாறிச் செல்லும் அனைவர்மீதும் மனமிரங்கி உமது வழியில் செல்ல அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்றும், எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.